From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 58/2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandiyammal | Father/Husband Name | : Subbaiah |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.12.2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

எதிரி ஆஜர். இரு தரப்பு கற்றறிநத வழக்கறிஞர் ஆஜர். சாட்சி பிராமண செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யபட்டது.

**முதல் விசாரணை:**

நான் அழகாபுரி பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அழகாபுரியில் உள்ள பெருமாள் சிந்து என்னும் இடத்தில் 60 சென்ட் வயல் எனக்கு சொந்தமாக உள்ளது. மேற்படி வயல் எனது பெயரில் தான் உள்ளது என்று நடராஜன் என்னை அடிக்கடி மிரட்டினார். தேதி ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடம் இருக்கும். காலை 8 மணி இருக்கும். எனது வீட்டிற்கு அருகில் உள்ள பள்ளி கம்மா அருகில் நான் சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என்னை முதுகில் அடித்தார். அருவாள் கைப்பிடியை வைத்து அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். நான் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசாரிடம் நடந்ததை சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் நான் கைரேகை வைத்தேன். புகார் வாக்கு மூலத்தில் எனது மகள் பாண்டிசெல்வி சாட்சி கையொப்பம் செய்தார். சொத்து பக்கம் வந்தால் என்னை கொன்றேபுடுவேன் என்று மிரட்டினார். புகார் வாக்குமூலம் **அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

எதிரியின் தகப்பனார் பெயர் அய்யவாவு என்றால் உங்களுக்கு தெரியுமா என்றால் என்னுடைய மாமனார் பெயர் அய்யாவு. எதிரியின் தகப்பனார் பெயர் அய்யாவு என்று சொன்னால் சரிதான். எதிரியின் தகப்பனார் அய்யாவு இறந்தததை பெயர் ஒற்றுமையை சாதகமாக உங்களால் பயன்படுத்தி உங்களுடைய கணவரால் மகன்களுக்கு தான செட்டில்மென்ட் ஆவணமாக ஏற்படுத்தி மோசடி செய்துள்ளீர்களா என்றால் அது தவறு. சொத்து நாங்கள் எடுக்கவில்லை. எதிரி தரப்பில்

உங்களுடைய கணவருக்கு எதிராக சொத்துக்களை அபகரித்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் பலமுறை புகார் கொடுக்கப்பட்டு விசாரரணை செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் சொத்துக்கள் எங்களுக்கு சொந்தமானது. எதிரி தரப்பில் இந்த நீதிமன்றத்தில் உங்களுக்கு எதிராகவும், உங்கள் கணவர், உங்கள் வாரிசு, மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோர்களுக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டு சிஆர்எம்பி 184-2022 நிலுவையில் உள்ளது என்றால் பொய். மேலும் சிஆர்எம்பி 184-2022 வழக்கு தொடர்பாக மேலவளவு காவல் நிலையத்திலிருந்து அறிக்கை நீதிமன்றத்திலிருந்து கேட்கப்பட்டு இன்று வரை அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களால் கொடுக்கப்பட்ட புகாரில் போலீசாரிடம் கொடுத்த வாக்கு மூலத்திலும் அரிவாளை வைத்து அடித்தார் என்ற விவரத்தை சொல்லியுளளீர்களா என்றால் நான் சொல்லியுள்ளேன். உங்கள் மகள் பாண்டிச்செல்வி எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ளீர்கள் என்றால் சுமார் 12 வருடத்திற்கு முன்பு நத்ததிற்கு பக்கத்தில் உள்ள கரியம்பட்டியில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் இந்த எதிரியால் எந்த வித குற்ற செயலும் உங்களுக்கு எதிராக செய்யவில்லை என்றும், உங்களுடைய குடும்ப உறுப்பினர்களின் தூண்டுதலின் பேரில் எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல.